## சுபகிருது வருஷம் 2022

## வருடப்பிறப்புக் கருமங்களும் பூஜை ஒழுங்குகளும்

கலியுகாதி சுத்ததினம் 1871218, நாடி 4 விநாடி 22, தற்பரை 30 க்குச் சரியான சுபகிருது வருடம் சித்திரை மாதம் 1ம் நாள் வியாழக்கிழமை காலை நாடி 4 விநாடி 23 **(அதாவது 14/04/2022 வியாழக்கிழமை காலை 07:50 மணி)** பூர்வபக்க திரயோதசி திதியில், பூர நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் விருத்தி நாமயோகத்தில், கௌலவக் கரணத்தில், மேட லக்கினத்தில், தனு நவாம்சத்தில், செவ்வாய் காலவோரையில், சுக்கிரன் சூக்குமவோரையில், ராசத குணவேளையில் நட்சத்திர பட்சியாகிய ஆந்தை சாவுத் தொழிலும் சூக்கும பட்சி அரசுத் தொழிலும் செய்யுங்காலத்தில் இப்புதிய சுபகிருது வருஷம் பிறக்கின்றது. முதல் நாள் பின்னிரவு நாடி 54 விநாடி 23 **(14/04/2022 அதிகாலை 03:50 A.M)** முதல் அன்று முற்பகல் நாடி 14 விநாடி 23 **(14/04/2022 காலை 11:50 A.M)** வரை விஷுபுண்ணியகாலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து **சிரசில் கடப்பம் இலையும், காலில் கொண்றை இலையும்** வைத்து ஸ்நானம் செய்து நல்லசிவப்பு அல்லது மஞ்சள் நிறமுள்ள பட்டாடையாயினும், சிவப்புக்கரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து பவளம், புஷ்பராகம் இழைத்த ஆபரணஞ்சூடி குலதெய்வ வழிபாடு செய்து தானதருமஞ் செய்து, குரு, பெற்றோர் முதலிய பெரியாரை வணங்கி ஆசிபெற்று அரிய தவத்தாற் பெற்ற மானிடப் பிறவியிற் செயற்பாலானவற்றை இனிது சிந்தித்து மங்களகரமாக வாழக்கடவர்.

**சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்:**

பரணி, மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம், பூராடம், உத்தராடம் 2ம், 3ம், 4ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1ம், 2ம் பாதங்கள் ஆகிய நட்சத்திரத்தில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து சூரியனுக்கு பொங்கல் பூஜைகள் செய்து, விக்னேசுவரர் முதலிய குலதெய்வ, ஆலய வழிபாடு செய்து இயன்ற தானதருமஞ் செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யக்கடவர்.

வருடப்பிறப்பு நேரம் : 14/04/2022 வியாழக்கிழமை காலை 07:50 AM.

விஷுபுண்ணியகாலம் : 14/04/2022 03:50 A.M முதல் அன்று 11:50 A.M வரை

(மூலம்: இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் 2022-23)

பெரிய ஊறணி, ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் சுபகிருது வருடப்பிறப்பு விஷேட பூஜைகள் 14/04/2022 வியாழக்கிழமை காலை 07:50 (A.M) மணிக்கு பெரிய ஊறணி திரு. திருமதி. கு. சாந்தலிங்கம் குடும்பத்தினர் உபயமாக நடைபெறும். அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு கைவிசேடம் வழங்கப்படும்.

அடியார்கள் மருத்துநீரை முதல் நாள் 13/04/2022 புதன்கிழமை காலை 11:00 மணிமுதல் அன்றிரவு 09:00 மணிவரை ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பரிபாலன சபை
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்
பெரிய ஊறணி, மட்டக்களப்பு